986



திருமந்திரநகரில்
திருக்கோவில் கொண்டெழுந்
தருளியிருக்கும்
திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ்
ஆண்டவளின்

# திருமுடிச்சரிதை

BY

**M. A. Peeris**

PUBLISHED BY

**Pitchai Gomes**

PRINTING PRESS, TUTICORIN.

921

[விலை அணா 2.

Q25:38·211TN
N21
[84177]



திருமந்திரநகரில்
திருக்கோவில் கொண்டெழுந்
தருளியிருக்கும்
திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ்
ஆண்டவளின்

# திருமுடிச்சரிதை

BY

**M. A. Peeris**

PUBLISHED BY

**Pitchai Gomes**

TUTICORIN PRINTING PRESS, TUTICORIN.

1921

PRICE AS 2 ] — [ விலை அணா 2.

# முகவுரை

நமது தாயாகிய திவ்ய சந்த மரியதஸ்னேவிஸ் ஆண்டவளின் "திருமுடிச்சரிதை" யென்ற இந் நூலைப் பார்வையிட்டேன்.

இதில் திருமந்த்ர நகரமென்னும் தூத்துக்குடியில் அர்ச். பனிமயமாதா ஆலயத்தில் கடந்த 1920௵ ஆகஸ்டு௴ 10௳யன்று நடந்த ஓர் அபூர்வ சம்பவத்தைப்பற்றித் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. பரம தேவதாயின் அதியாச்சரியமானகுணங்களும் அற்புதநவங்களும் வாசிப்போரது இருதயங்களை உருக்கும் என்பதில் சந்தேகமில்லை இதை வாசிப்பதினால் தேவதாயின் மீது விசேஷபக்தியும் விசேஷ அன்பும் உண்டாகும்.

இதைப்பிரசுரிக்கும்படி முன்வந்தவர்களுக்கு தேவ ஆசீர்வாதம் உண்டாகக் கடவது.

S. Thomas Selvarayan, M. Ap.

௨—8—21

1-SEP 1921

தெய்வமே துணை

# திருமந்திர நகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின்

# திருமுடிச்சரிதை.

எங்கும், எப்பொழுதும், எவ்வுயிர்களிடத்தும் நிரந்தரம் வியாபித்து, வேண்டியபொழுது வேண்டுவன செய்யும் சர்வ வல்லமைபொருந்திய தனிமுதற் கடவுளின் இதய தாமரையில், ஸதாஸார்வதா வாசஞ்செய்து வந்தவளும், வருகின்றவளும், வருபவளுமாகிய, பரிசுத்தபனிமயத்தாயின் அழகிய பூவடிகள் நல்லார்க்கும் பொல்லார்க்கும் எல்லார்க்கும் அரியதுணையாயமைந்து அருள்சுரக்கும் வன்மை வாய்ந்தன வென்பது தெளிவுடையார் அனைவர்க்கும் ஒப்பமுடிந்த சித்தாந்தமென்க.

இப்பிரபஞ்சம் நிருபணமாகிப் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருவதற்குக் காரணமாய் நிற்குங் கடவுளினது அகோசர அபிரகஸ்ய அதிசய எண்ணம் இனிது நிறைவேறுதற்கு முக்கிய கருவியாய் விளங்கினவள் நமது தாயாகிய பரிசுத்த பனிமயத்தாயெனில் அவளது மகிமைப்பிரபாவத்தை எத்தகையோராலும் இணை

கூறுதல் தரமோ? முதியவளாகிய எவையின் வழி மனுக்குலத்திடை நுழைந்த பாவத்தையும், அதனால் விளைந்ததாகிய கேட்டையும் வேரோடுபிடுங்கி யெறிவதற்கு வேண்டியிருந்த ஒப்பற்ற வஸ்துவின் நராவதார மகிமைக்கு ஆஸ்பதமாய் நின்றவள் நமது தாயாகிய பரிசுத்த பனிமயத்தாயெனில் அவளது வரத்தின் பெருக்கத்தை எவரால் வர்ணிக்க முடியும்? அகிலலோக நாயகனை அமுதூட்டவும், ஏந்தவும், கிடத்தவும், வளர்த்தவும் பாக்கியம் பெற்றவள் நமது தாயாகிய பரிசுத்த பனிமயத்தாயெனில். அவளது மகிமைப்பிரபாவங்கள் அளவிடற் பாலனவோ? வகுக்கரிய வரத்தினையும், தொகுக்கரிய நலத்தினையும் வாய்க்கப்பெற்ற நமது தேவதாயினது உற்பவமோ களங்கமற்றது. மாசில்லாதது. அவளது ஜீவியமோ பரிசுத்தமானது. எவர்க்கும் இரங்குங் குணமுடையவள். இரக்கமே உருவாகப்பெற்றவள். எக்காலுங் கன்னிமை குன்றுதவள். மணிமுடி மன்னன்றுவீது கோத்திரமாகிய நெடிய சிகரத்தின் ரித்திலத்தீபமாய் ஜொலிப்பவள். மாதர்க்கரசி. மகிதல ராணி. வான்றலராக்கினி. அக்கினிமயமாகிய கிரணங்களைப் பொழிகின்ற சூரியனை ஆடையாக உடுத்தும் அன்றலர்ந்த தாமரைபோல் அநுதினமுந் துலங்கும் அற்புத வசீகரி. எத்துணை உக்கிரம முடைத்தான வாயினும், எத்தகைய ஆசாபாசங்களும் பரமதேவ தாயினது எல்லை கடந்த குணாதிசயங்களைத் தஹிக்க முடியாதன வென்பதற்கு ஆதித்தனை ஆடையாக அணிந்தாள் என்

பதினுஞ்சான்று வேறுளவோ? நமது தாயாகிய பரிசுத்த பனிமயத்தாயினது திருமேனியை வளைந்து,சூரியன் தனது சுபாவத்திற்கு விரோதமின்றிக் கிரணங்களைப் பொழிகின்றதேனும் அவளது பாதாரவிந்தங்களைத் தாங்கிநிற்கின்றதாகிய இளம்பிறையும், அவ்வாறே தனது சுபாவத்திற்குவிரோதமின்றிச்சீதளமாகிய கிரணங்களைப் பொழிந்து கொண்டிருத்தல் ஆச்சர்யமில்லையென்போமோ? களங்கமற்ற கண்ணுங், களங்கமற்ற கருத்துமுடையார் எவராயினும் பரமாச்சர்யமென்றே கொள்வர். சூரியப்பிரகாசத்தின் முன் சந்திரன் ஒளிவிடுதல் இயற்கை விரோதம். எனினும், எட்டுணைகலக்கமின்றித் தனது சுபாவத்திற்கிணங்கச் சந்திரன் பிரவர்த்தித்து வருதல் "தேவதாயை அண்டினவர்கள் ஒருபோதுங் கைவிடப்படுவதில்லை" யென்று அர்ச். பெர்னர்துவசனித்ததைஉண்மைப்படுத்துகிறதல்லவா? ஆம்; வானவர்க்கரசியை யடுத்தவர்கள் குணத்தினும் செயலினும் எவ்வளவு குறைந்தவராயிருப்பினும் கைவிடப்படுவதில்லை யென்பதைப் பரமநிச்சயமாகக் கொள்வோம். பசியகிரணங்களையுமிழ்கின்ற பன்னிரு தாரகைகள் பரமதேவதாயின் சிரோபாரத்தை வளைந்து சுடர்விடுதல், சுவர்க்க, மத்திய, பாதாளமென்னப்பட்ட மூன்றுலகங்களுக்கும் இராக்கினி யென்பதை ருஜுப்படுத்தவன்றி வேறல்லவென்க. இவைமட்டுமோ? காய்மகாரம் என்னுங் கனலைக்கொப்புளித்துக் கொண்டிருக்குந் தன்மையுடையதும், நமக்கு வரவிருந்தாகிய பசி

சுத்தமும், பாக்கியமுமான அந்தஸ்தைத் தொலைத்துவிட வேணுமென்பதில் உறுதியுடையதாய், பாமுருவமாகிய பாம்புருவையெடுத்துச், சபிக்கப்பட்டவோர் கனியைக் காட்டி நமது முந்தையாகிய ஏவையைக் கெடுத்ததூஉமான ஈனப்பசாசை அசைய வொட்டாது மிதித்துக் கொண்டிருக்கின்றாள் நமது தாயாகிய பரிசுத்தபனிமயத்தாய். எனவே, அவளது தாசர்கள் எவ்வாற்றானும் அலகை வாய்ப்பட்டு ஏவையடைந்த கெதியையடைய முடியாதென்பது பெறப்படுகிறதல்லவா?

சர்வலோக நாயகனின் மாதா சர்வலோக நாயகியென்பதிற் சம்சயமில்லை- நடுநிலை பிறழாத நீதி செலுத்தல் அரசர்க்குரிய லக்ஷணமென்ப. நமது ராஜாதிராஜன் மநுநெறிகண்ட அவ்வொழுக்கத்திற்குச்சிறிதளவும்மாறுபட்டிருக்கமுடியாது. இம்முறையை, யநுசரிக்கும் போழ்து அவர் பாவிகள் பொருட்டுச் சிந்திய இரத்தம் பிரயோஜனத்தைத் தரமுடியாதாகிவிடும். வித்யாபாரகரும், வேதபாரகரும் அவ்வகில நாயகனாகிய நமது கர்த்தர் ஜேசுக்கிறீஸ்துநாதர் சிந்திய திருவிரத்த வெள்ளத்தின் சிறுதிவலையே, இவ்வுலக வீடேற்றத்திற்குப் போதுமானதாயிருந்ததென மொழியுங்கால், பிறிது சிந்திக்கவேண்டியதுமுளவோ? இதிலோர் பரம இரகஸ்யத்தைத் தியானிக்கவேண்டும். அஃதியாதெனில், அரசனாயிருப்பின் நீதிகோணாதிருத்தல்முறை. பகவத்வசமோ கிருபை கடாக்ஷம் மீசுரமிருத்தல் முறை. என்றாலும், இவ்விரண்டும் ஆராய்ச்சிமுறையில்

ஒன்றுக்கொன்று கிழக்கு மேற்குப்போன்ற சம்பந்தமுடையனவாகும். இனி, இவ்விருதத்துவங்களும் நிறைவேறாதொழியின், அன்றே இவ்வவனி அரைநிமிஷமும் நிலைத்திருக்கமுடியாதென்பதை நிச்சயமாய் நம்பவேண்டும். நீதிக்கும், அருளுக்கும் மத்திய ஸ்தானத்தில் பரமதேவதாயினது கிருபாநோக்கம் நிலைத்திருப்பது கொண்டே அவ்விருதத்துவங்களும் தம்முள் விரோத பாவமின்றிச் சமரஸ நிலையைப் பெறவும் ஜீவர்கள் கடைத்தேறவும் வழி யேற்பட்டுள வென்பதில் தடையின்று. இதுவே நாம் அறியக்கிடந்த ரகஸ்யார்த்தம்.

நமது தாயாகிய பரிசுத்தபனிமயத்தாய் இரக்கமே சொரூபமாயினமையால், பாவிகளுக்காகத் தமது திருக்குமாரனிடத்திற் பரிந்து பேசுவதைத்தவிர அவளிடம் வேறு விகல்பத்தைக் கற்பித்தல் ஸகஜவிரோதம். அடி நடு முடிவில்லாத ஆண்டவரும் அப்பரம கன்னிகை தம்மையீன்றெடுத்த தாயாராகவும், அரசியாகவும் இருப்பது பற்றி அவளது பிரார்த்தனையை மறுக்கமுடியாதவராயிருக்கின்றார். இவ்வளவு வல்லமையுடைய தாயையணுகப்பெறாதவர், கேவலம், தேகமே நித்தியம் போகமே மோக்ஷம் என்ற அசட்டுரையில் நம்பிக்கை வைத்திருப்பாரன்றி ஏனையோரல்லர். நீசமாகிய இத்துறையில் நிலைத்திருப்பவர் மானிடப் போர்வை போர்த்த அலகையாயிருக்கலாமென்பதுவே வேதசாஸ்திரிகளின் விரிவான முடிபு.

தேவ தாயின் மகிமையும், பிரபாவங்களும் இவ்வாறு தெய்வீக மயமாயிருப்பதினாலேயே உலகத்தின் ஒருகோடிமுதல் மறுகோடி வரை அவளது பரிசுத்த நாமம் பக்தியோடு துதிக்கப்பட்டு வருகின்றது. எல்லாருக்குந்தாயாகிய அமலோற்பவ கன்னித்தாய் எழில் வளம் வாய்ந்த இந்தியநாட்டின் தென்கோடியில் வசிப்பவர்களாகிய பரதகுலத்தவர்களுக்கு எவ்வாறு விசேஷ அடைக்கலமும், விசேஷ பாதுகாவலும், விசேஷ தாயுமானாள் என்பது ஓரளவு எமது சிற்றறிவுக்கெட்டிய வாறு ஈங்கு விளங்கவைத்தல் அவ்வன்னையின் பக்தி விசுவாசப் பரம்புதலுக்கு எட்டுணையேனும் சாதகமாயிருக்கக்கூடுமென்பது எமது நம்பிக்கை.

பல்வளம் படைத்த பரத மஹா நாட்டிற்குச் செவ்விய திலகம்போன்று விளங்குவது பாண்டி நாடு. இந்நாட்டிற்குப்பரதகுலத்தவர்களின் சந்ததியிற்றோன்றியவர்களே பரம்பரை ராஜ்ய பரிபாலனஞ்செய்து வந்தன ரென்பது சரித்திரம். இக்குலத்தினர் கால வேறுபாடு பற்றிப் பல்வேறு தொந்தரைக்குள்ளாக நேர்ந்தனர். சத்துருக்களின் படையெடுப்பு அடுத்தடுத்துநேர்ந்தது. இது காரணத்தால், ராஜ்ய உரிமைகளையும், சுதந்தரங்களையும் இழக்கும்படியாயிற்று. எனினும்போர்க்குணத்திலும் உதாரத்துவத்திலும் விசேஷ திறமையோடு விளங்கி வந்தனர். இக்குணங்கள் சத்துருக்களுக்கு நிரந்தரம் பீதியை விளைவித்துக்கொண்டுவந்தமையால் இக்குலத்தினரை அடியோடு கருவறுத்துவிடவேணு

மென்பது அவர்களது விரதம். ஆனதுபற்றிச் சத்துருக்களாகிய மகமதியர், வடுகர் ஆகிய இவர்கள் பல்வகைப்பட்ட ஹிம்சைகளை விளைவித்து வந்தனர். இவைகளுக்காற்றாது போர்த்துக்கேசிய அரசாட்சியாரிடத்தில் அடைக்கலம் புகுந்தனர். அக்காலம் போர்த்துக்கேசியர் நம் நாட்டின் சிற்சில பகுதிகளில் அரசு செலுத்தி வந்தனர். இவர்கள் நம்முன்னையோரது வேண்டுகோளை யாதரித்துச் சத்துருக்களின் நிர்ப்பந்தங்களினின்றும் விடுவித்தனர். பாண்டிநாட்டுக் கரைதுறைகளில் நிர்ப்பயமாகவும் அமைதியுடனும் வசித்து வரும்படியான பாதுகாப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுத்தனர்.

போர்த்துக்கேசிய துரைத்தனத்தாரின் அன்பு இஃதுடன் முடிவடைந்துவிடவில்லை. இவ்வுலகத்தில் நம்மனோரது அமைதியான வாழ்விற்கு இடையூறுயிருந்தவைகளை நீக்கியதுபோல், பரமசாம்ப்ராஜ்யமாகிய அவ்வுலக வாழ்விற்கு இடையூறுயிருப்பவைகளையும் நீக்கிவிடுதல் சிறந்த தர்மமாகவுங், கடமையாகவும் அவர்கள் மதித்திருந்தமையால், பரதகுலத்தவர் பரம்பரையநுசரித்து வந்ததாகிய அஞ்ஞான மார்க்கத்தை விடவும், மெஞ்ஞான மார்க்கத்திற் புகவும் நேர்ந்ததெனல் திரண்ட உண்மையென்க. இவர்கள் மெய்ம்மறையைத் தழுவ ஆரம்பித்த காலம் கி. பி. 1534ம் வருஷ முதலென்க. அப்பால்,

ஆசாரத்திலும் அநுஷ்டானத்திலும்,பக்தி வைராக்கியம் மிக்குடையவர்களாகிய பரதகுலத்தவரிடை

தெய்வாதீனமாய் ஊன்றப்பட்டுவிட்டதாகிய மெஞ்ஞானவித்து நல்ல பலனைத் தரும்படி முயன்றவர்களுள் முதற்கண் வைத்தெண்ணத்தகுந்தவர் சிந்துதேச அப்போஸ்தலராய் விளங்கிய அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரென்பதில் சடையில்லை. இவரது கடினப்பிரயாசையே அக்காலத்திற் பரதகுலத்தவரது மனத்தை அலைத்துக்கொண்டிருந்ததாகிய பழக்கவாசனையென்னும் வேதாளத்தை விரட்டியடித்து, ஒழுக்கத்தைத் தலைக்கொண்ட கிறீஸ்துவேதத்தில் ஸ்திர புத்தியுடனிருந்து வரவு மேதுவாயிற்றென்பது மறுக்கமுடியாத உண்மை: அர்ச்:பிரான்சீஸ்கு சவேரியாரது ஜீவிய சரித்திரத்தை உணர்வார்க்கு மேற் கூறிய உண்மை இனிது புலனாகும்: அத்தபோதனர் காட்டி வந்த அன்பும் ஆதரவும் எழுதுந்தரமல்ல. பரத குலத்தவர்க்கு ஓர் ஞானத்தந்தையாகவும், விசேஷ பாதுகாவலராகவும் இன்றளவும் விளங்கிவருகின்றாரெனில், அவரது அன்பின் பெருக்கு எத்துணை ஆழமுடைத்தானதாயிருந்திருக்கலாமென்பது சொல்லாமலே விளங்கும்:

பல ஆயிரமைலுக்கப்பாலுள்ள பிரதேசத்திலிருந்து அஞ்ஞானமயமாகிய கீழ்த்திசைப் பிரதேசங்களுக்கு அவரெழுந்தருளுவதற்கு ஹேதுவாய் நின்ற ஞான அலுவலை நிறைவேற்றும் பொருட்டுத் தூரதேச யாத்திரை செய்த ஞான்றும் "பரதவர்" என்ற நாமத்தைக் கனவிலும் மறந்திருக்கவில்லை யென்பதை நிரூபித்தல் கஷ்ட சாத்தியமானதின்று. அவரெத்திசையிலிருந்தாலும் அவரது திருவுள்ளம் தமது ஞானப்பிள்ளைகளாகிய பரதவர் மத்தியிலிருந்த வந்ததென்பதற்கு இதன் கீழ்க்கூறப்புகும் உண்மையே தக்க சான்றாகும்.

பரதவர் முத்துப்படுப்பதிலும், கலமோட்டுவதிலும் விசேஷ பயிற்சியும் பரிச்சயமுமுடையவர்கள். எனவே, இவர்களது முக்கிய வாசஸ்தலம் கடற்கரையையே யடுத்திருந்தது. சத்துருக்களின் படையெடுப்பு காரணமாகச் சிதறுண்டு பல்வேறு கரை துறைகளில் வசிக்கும்படி நேரிட்டதெனினும், திருமந்திர மென்னும் தூத்துக்குடியே அக்காலத்தில் பரத குலத்தவர்க்கோர் ராஜ ஸ்தலமாய் விளங்கி வந்ததென்க.

இந்நகரிலிருந்தே நமது முன்னையோர் தாங்கள் நூதனமாகக் கைக்கொண்ட சத்ய திருமறையில் பக்தி விசுவாசத்தைச் செலுத்திவந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலேயே திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின் தேவாலயம் கட்டப்பட்டு முடிந்ததென்பது சரித்திரம். பரதவர் வாழும் வேறு எப்பகுதியிலும் இத்தகைய பிரமாண்டமானதும், பிராசீனமானதுமான தேவாலயத்தைக்காணல் அரிது. இதனை வியாஜமாக வைத்து ஆலோசிப்போமாயின் எப்பகுதிகளினும் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடிப் பகுதியிலேயே சத்ய திருமறையின் வளர்ச்சியும் அதையநுசரிப்பவர்களின் தொகையும் ஏராளமாயிருந்தனவென்பது புலப்படாதிரா.

அங்ஙனமாயின், இத்திருமந்திர நகரைப்பற்றிய ஞாபகம் நமது ஞானத்தந்தைக்கு மிக்கு விசேஷமாயிருந்திருக்கலாமென்பது சந்தேகத்துக்கிடமின்று. அங்ஙனமிருந்தமை பற்றியே நமது முன்னோர்களின் பெருமுயற்சியால் நிர்மாணிக்கப்பெற்றதாகிய தேவாலயத்தில் "பரதர் மாதா" வென்னும் திவ்ய சந்தமரியு

தஸ்நேவிஸ் ஆண்டவள் எழுந்தருளவும், அவளது அநுகூலத்தைப்பெற்று வரவுமான அதிர்ஷ்டத்தைக்கொண்டிருக்கிறோமென்பது பொய்யன்று.

அர்ச். பிராஞ்சீஸ்க் சவேரியார், தாம் கருதிவந்த ஞான அலுவலை நிறைவேற்றும் பொருட்டுச்செய்து வந்த யாத்திரையில், பிலிப்பைன் தீவுக்குச்செல்லும்படியாயிற்று. அத்தீவின் தலை நகராகிய மனில்லாவிலுள்ள கன்னிகாசீர்மத்தில் விஜயஞ்செய்திருந்தபொழுது, நமது தாயாகிய பரிசுத்த பனிமயத்தாயின் திருவுருவத்தை யாங்குக் ண்டனர். கண்டவுடனே அவரது மந்தையாகிய பரதகுல மக்களின் ஞாபகம் உதித்தது. உடனே மடாலயத்தலைவியினிடத்து நம் பொருட்டுப்பரிந்துபேசி அத்திருவுருவத்தைத் திருமந்திர நகரமென்னும் இத்துறைக்கனுப்பிவைக்கும்படிபிரார்த்தித்தனர். இப்பிரார்த்தனை, நமது ஞானத்தந்தையார் பரலோக பிராப்தியான மூன்றாவது வருஷத்தில் நிறைவேறிற்று. கி. பி. 1555ம்-௵ ஜூன்௴ 9௳ யன்று நமது பனிமயவன்னை நமது துறையாகிய தூத்துக்குடியை யடைந்தனளென்பது நமது ஞாபகத்திலிருந்து வரவேண்டிய முக்கிய விஷயம்.

இளம்பிறை தாங்கிய எமது பனிமயத்தாய், தூத்துக்குடி யென்னும் இத்திருமந்திர நகரைத் திருக்கோவில்கொண்டு சுமார் நான்கு நூற்றாண்டுகளாகின்றது. அன்று தொட்டின்றுகாறும் அத்தேவதாயினது அநுக்ரஹத்தை யடையப்பெறாதார் ஒருவருமில்லையென்றே சொல்லவேண்டும். விசேஷமாய்ப் பரத குலத்தவர் மட்டில் விசேஷ நன்மைகளைப்பொழிந்து வருகிறா

ளென்பது பிரசித்தம். பரமதேவதாய் பரதர் மக்களைத் தமது சொந்த மக்களாக ஏற்றுக்கொள்ளவேணுமென் பது நமது ஞானத்தந்தையாகிய அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாரது கருத்துப்போலும். ஆனதுபற்றியே அவளைப் "பரதர் மாதா" வென்றழைத்து வரும்படி யான அதிர்ஷடத்தை யெய்தப்பெற்றிருக்கின்றோம். பனிமயம் அல்லது தஸ்நேவிஸ் என்னுந் திருப்பெயர் மற்றையோரினும் நமது செவிகளுக்கு விசேஷ இன் பத்தைத்தருவாதாயிருக்கின்றது. ஆகஸ்டு மாதம் 5ம் தேதியானது பரதகுலத்தவர்க்கோர் "ஜாதீய தினம்" என்பது பாரம்பரைவழக்கு. இந்நகரில் ஆகஸ்டு மாதம் 5உல் நடைபெறுவதாகிய திவ்யசந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின் திருவிழாவொன்றே பரதர், பரதரல்லா தார், கிறிஸ்தவர்கள், அஞ்ஞானிகள் ஆதியோரனைவர்க் கும் விசேஷ உணர்ச்சியையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணக்கூடியாதாயிருந்து வருகின்றதென்பது திர ண்ட அநுபவம். அத்தினம் நமக்கோர் ஜாதீய தின மாதற்கு, அவள் நமது மாதாவென்பதில் நமக்கிருந்து வரும் பற்றுள்ளமன்றிப்பிறிது காரணமில்லை யென் றுணர்க. எந்த உற்சவகாலத்திலுங் காணமுடியாத ஆனந்தமும் ஆரவாரமும் திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின் உற்சவ காலத்திற் காணலாம். அந்நா ளில் அத்தேவதாவைத்தரிசித்துத், தத்தம் பிரதிக்ஞை யைச் செலுத்த வரும் அந்நிய மதத்தினர் அளவி லர். அப்படியாயின் பரமதேவதாயின், மக்களெனப் படுங்கிறீஸ்தவர்களுக்கு அந்நாள் எத்துணை விசேஷ மாயிருக்கு மென்பதை விரித்துரைக்கவும் வேண்டு மோ?

நமது முன்னோர்கள் போர்த்துக்கேசியரின் புண்ணிய முயற்சியினால் கிறீஸ்துமதாநுசாரிகளாகத் திருப்பப்பட்டுளாரேனும், மேற்கூறியது போன்ற குருட்டாட்டத்தின் வாசனையானது அவர்கள் மனதை ஒரோர்வேளை கலக்கத்துக்குட்படுத்தாமலிருக்கவில்லை. பழக்க வாசனையை யொழித்து விடுதல் எளிதில் முடிவதின்று. எனவே, நமது முன்னோர் வாசனுவஸ்தைக்காளாகி இடர்ப்பட நேர்ந்தது ஆச்சர்யமாக நோக்கக்கூடிய தன்றென்க. அலைப்பட்ட துரும்புபோல் அங்கலாய்த்தனர். இருதோணியிற் கால் வைத்தார்போன்று இடர்ப்படலாயினர். சந்தேகமென்னும் சர்ப்பத்தின் வாய்ப்பட்டுத் தவித்தனர். இத்யாதி துன்பங்களெல்லாம் திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் ஆண்டவள் திருக்கோவில் கொள்ளச் சித்தம் வைத்த அன்றே, கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக்கூட்டமாகக் கரைந்தொழிந்தன வெனல் மிகைப்படக்கூறியதின்று. புதியமார்க்கத்தில் அவர்களுக்கிருந்து வந்தனவாகிய அசூயை, சந்தேகம், விபரீத முதலிய ஆபாசப்படலங்களெல்லாம் அறுந்தொழிவதாயின. மெஞ்ஞானத்தினுறைவிடமாகிய சத்திய வேதத்தின் உண்மையை உணரவும், உணர்ந்தவழியில் ஸ்திரமாயிருந்து வரவும், பரிசுத்த பனிமயத்தாயினது திவ்ய பிரசன்னமொன்றே நிறைந்த கருவியாய் விளங்கிற்றென்பதில் இம்மியளவு சந்தேகத்திற்கிடமிருக்கிறதாக நினைப்பதற்கு அநுபவமொத்து வரவில்லை. இஃது மெய்ம்மறையின் மெய்ப்போதனையை மெய்யாகவே உணர்ந்திருப்பார்க்கு ஒப்பமுடிந்ததொன்றென்பதில் தடையின்று.

பரம தேவதாயை யண்டினவர்கள் எக்காலத்தும் கைவிடப்படுவதில்லை யென்பது, வேதாந்த இரகஸ்ய உண்மையமிர்தத்தைப் பருகிய உத்தம தபோதனர்களின் வாக்கு. இவ்வாக்கிற்குப் பரத குலத்தவர்கள் நிறைந்த இலக்கியமாயிருந்து வருகிறார்களென்பது மறுக்க முடியாத சத்தியம். ஆழமாகிய சமுத்திரத்தின் நீர் நிலை, ஆழம், பரிமாணம் இவைகளை யளந்தறியினும், பரம தேவ தாயின் அன்பாகிய சமுத்திரத்தை யளத்தல்,எவர்க்கும்எக்காலத்தும் அரிதெனல் நிறைந்த உண்மை. அவளது அநுக்ரஹத்தைப் பெற்றார் அளவிலர். புத்ரசந்தானமின்றி அங்கலாய்த்துக் கொண்டிருந்தார் ஆனந்தமுறுவாராயினர். துன்ப துயரங்களில் ஈடுபட்டுச் சுழன்று கொண்டிருந்தவர்கள் சுகத்தை யடைந்தனர். சண்டை, சச்சரவு முற்றுகையிட்டுக் கொண்டிருந்த குடும்பங்கள், அமைதி, சமாதானம் இவைகளுக்கு உறைவிடமாயின. பாவிகள் மனந்திரும்பினர். தரித்திரர் வறுமை நீங்கினர். வியாதியஸ்தர் விடுதலை பெற்றனர். கடலோடிகள் தங்கள் வள்ளம், தோணி, படகு, கலம் முதலியவற்றைக் கருதிய துறைக்குக் கஷ்டமின்றிச்செலுத்தவும், மீண்டுங் கரைவந்து சேரவுமாயினர். இன்னோரன்ன நன்மைகள் பலப்பல. அவற்றை வகுத்துரைத்து விடலாமெனல், ஞெண்டுக்குழியில் சமுத்திர ஜலமத்தனையும் அள்ளி நிரப்பிவிட உத்தேசிப்பதை யொக்குமன்றிவேறில்லை.

இத்தனை அன்பும், ஆதரவும், அருளும் பொருந்தக் கொண்ட எமது தாய்க்குப் பேயையன்றி யாரே

இடர் நினைப்பர். விஷம்பொருந்திய பேயும் அவளது காலின் கீழ்க்கிடந்து நசுங்குகின்ற போழ்து எமதன் னைக்கிடர்புரிய எவரே துணிவர். எனினும், பரமதேவ தாய் தயாவாரிதியாய் விளங்குகின்றாள். கொடியபா விகளையும் தன்னகப்படுத்தி அவர்களைப் புனிதமாக்கும் சுபாவமுடையவள். எனவே, எவர் எவ்வகைச் செய லுடையரா யிருப்பினும், அவள்பால் செல்வதற்குக் கொஞ்சமும் பின் வாங்கமாட்டார். இது திண்ணம்.

பரமதயாநந்த பரமேஸ்வரியாகிய பரிசுத்த பனிமயத்தாயின் திவ்ய மங்கள வருஷோத் ஸவம் பரம்பரையை யநுசரித்து 1920ஞு ஆகஸ்டு மாதம் 5உயாகிய சுபதினத்தில் சர்வாடம்பரங்களு டன் இனிது நிறைவேறப் பெற்றது. தேவதாயின் பக் தர்களனைவரும் தத்தமக்குரிய இஷ்ட சித்திகளைப் பெற்று மீள்வாராயினர். இதில் ஓர் விசேஷத்தைக் குறிப்பிடுதல் அவசியம். அதாவது, பரம தேவதாயின் விசேஷ பாதுகாவலை விடாது தழுவி நிற்பவர்களா கிய பரதகுலத்தவர்களின் கல்வி, செல்வாக்கு, நாகரீ கம், முதலிய அபிவிர்த்திகளின் பொருட்டுப் பரத கான்பெரன்ஸ் என்னும் முதலாவது மஹாஜனசபை ஸ்தாபிக்கப்பட்டது இத்தினமாகலின், ஏனைய வருஷங் களிலும், பரதர் மாதாவாகிய அர்ச். பனிமயத்தாயின் திவ்ய உத்ஸவமானது பரதகுலத்தவர்களுக்கு விசேஷ குதூஹலத்தையும் உத்ஸாகத்தையும் உண்டுபண்ணத் தக்கதாயிருந்த தென்பதில் ஆக்ஷேபமின்று.

கொடியமயக்கத்தைக்கொன்று ஜெயவிருதேந்திய மஹோந்நத மஹாராணியாகிய பரிசுத்த பரம அன்னை

யின் வருஷோத்ஸவம் பூர்த்தியான ஆருவது தினமாகிய 1920ம் ஹூ ஆகஸ்டுமீ 10ௗ செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் அவ்வன்னை எழுந்தருளியிருக்கும் தேவாலயத்தின் மணியானது அலங்கரிக்கப்பட்டது. இம்மணியோசை நகரத்தை நடுங்கவைத்துவிட்டது. யாது சம்பவித்ததோ வென்ற மனத்தினராய் யாவரும் அர்ச்- பனிமயத்தாயின் தேவாலயத்தைத் தேடி யோடி வந்தனர். சில நிமிஷங்களுக்கெல்லாம் சிறுவர், வாலிபர், வயோதிபர், ஆண், பெண் அனைவரும் எள்ளிட இடமின்றித் தேவாலயத்தில்நிறைந்து விட்டனர்.

ஹா! பரிதாபகரமான காட்சி- பயங்கரமான காட்சி-நடுக்கத்திற்குரிய காட்சி-நாவாலுரைக்க முடியாத காட்சி. ஐயோ! சர்வலோக இராக்கினியாகிய பரிசுத்த பனிமயத்தாயின் கோடி சந்த்ரப்ரபையை யொத்து விளங்கும் வதனமண்டலம் விசனத்திலடிபட்டு விளங்குகின்றது. எத்தகைய கவலை, பீடை, துன்பதுரிதங்களையும் மாத்திரைப்பொழுதில் போக்கடிக்கக்கூடிய கருணைசாகரமாகிய கிருபா நேத்திரங்கள் பார்த்தவர்கள் மனத்தைப்பதைப்புறச்செய்யக்கூடிய வியாகூலத்தைக் கொண்டு விளங்குகின்றன. அன்பும், புன்னகையும் அமைந்தொழுகும் செம்பவளவாய் வாடிய குமுதமலர்போன்று சோகமயத்தை யடைந்திருக்கின்றது. காணுந்தோறும் ஆநந்தாமிர்தத்தை அள்ளியிறைக்கும் பரமதேவதாயினது திவ்யசொரூபத்தோற்றம் யாவருள்ளத்தையும் நடுக்குறச்செய்து தேகம் மயிர்க்குச் செறிய ஆலயமுழுவதும் அம்மா! அம்மா!! தாயே!

தாயே! மாதாவே!! மாதாவே!! என்றகூக்குரலைக் கடள் முழக்கோ வென்றெண்ணும்படி உண்டு பண்ணிவிட்டது.

ஐயோ! பரிதாபம்! ஆற்றொணுத்துக்கம்! அடக்க முடியாத கஷ்டம்! அறியமுடியாத சம்பவம். என்னை? ஸ்வர்னகசித ரத்ந சிம்மாசனத்தின்மீது திருக்கோவில் கொண்டிருந்தாளாகிய எமதாத்தாளது ஈாரு தார கை பூத்த, எழின்மிக்க சிரோபாரத்தை அழகுசெய்து கொண்டிருந்ததாகிய வெண் பொற்கிரீடத்தைக் காண வில்லை.

ஐயோ! அம்மட்டுமா? எம தன்னையின் திவ்யகாத்தில் செவ்விய அன்னம்போல் அமர்ந்து குறுநகை புரிந்துகொண்டிருந்த திருக் குழந்தையாகிய எம்பெருமான் திவ்ய ஜேசுவினதுசென்னியில் மின்னிக்கொண்டிருந்ததாகியவெண் பொற்கிரீடத்தையும்காணவில்லை.

திரியுலக ராஜேஸ்வரியாகிய எமதன்னைக்கும், எவ்வுயிர்க்குமிறைவனுகிய எமதப்பனுக்கும் ஏக காலத்தில் இவ்வித நிந்தை எற்படுமெனில் அதை யாரே சகிக்க வல்லார்? உணர்விழந்தார் பலர், உரையிழந்தார் பலர், மதியிழந்தார் பலர், மனசிழந்தார் பலர், உடல் மறந்தார் பலர், உடனயர்ந்தார் பலர். ஆலயமுழுவதுங் கண்ணீருங் கம்பலையுமேயன்றிவேறில்லை. மாதர்கள் ஒருபுறமாய் நின்று ஊற்றுப்பெருக்கோ ஆற்றுப்பெருக்கோவெனக்கண்ணீரைப்பெய்து மாதாவே! மாதாவே!! மன்னித்தருளும், மன்னித்தருளும் என்றிரங்கி

விம்மி, விம்மியழுமொலி எவ்விதத்தானும் அடக்கமுடி யாததாயிற்று. குருப்பிரசாதிகளும், திருப்பணியாளரும் ஏனையோரும் ஆலயத்தில் தளம் முதல் முகடுவரை ஒவ்வோரிடத்தையும் தேடிப்பார்த்தனர். காணப்பட வில்லை. சஞ்சலம் விர்த்தியாகின்றது. சாந்திக்கிடமி ல்லை. அனற் பட்ட மெழுகாய் அகங்கரைகின்றனர். ஆலைவாய்க்கரும்புபோல் அங்கலாய்க்கின்றனர். ஆல யத்தின் உட்புறத்தில் பாடகர் ஸ்தலமாகிய மேடை யின் கிராதிகளில் கனத்ததும், மெல்லியதுமாகிய இருகயிறுகள் கட்டிக்கீழே தொங்கவிடப்பட்டிருந்தன கனத்தகயிறு ஆலயமணியில் கட்டியிருந்ததாகும். அக் கயிற்றின் வழியாக மேலேறிப்பார்க்கும்பொழுது வெ ளிப்புறத்திலிருந்து வரக்கூடிய மேடை வாசல்கள் திறக்கப்பட்டிருந்தன. கள்வர், திருடர் என்ற பேரி ரைச்சல், கிளம்பிற்று. மூலைமுடங்குகளெல்லாம் தேடி னர். கள்வரையுங் காணோம், கனகசோபித முடிகளை யுங்காணோம்.

ஹா! துரோகம்! சர்வ நலன்களுக்கும் ஊற்றுகவும் உறைவிடமாகவும் இருக்கக்கூடிய எம்பெருமாட்டி யின் திருச்சிரசைத் தீண்டுவார் யார்? திருடுவார் யார்? பேய்க்கும் அரிதன்றோ? அங்ஙனமிருக்கக் கள்வர்டினர் மானிடராகக்கொள்ளுதல் எங்ஙனம்? ஐயோ, முன்னம் எம்பெருமானாகிய திவ்ய ரக்ஷகனைக் கன்னத்தில் முத்த மிட்டுக் காட்டிக்கொடுத்த பன்னிரு சீடர்களிலொருவ னாகிய யூதாஸ்ஸ்காரியோத் என்னுங் கொடிய பாவியின் செய்கையையொப்ப நயவஞ்சகமாகச்சென்று எமது

தாயின் முடியைக் கவர்ந்தார்போலும். சேயனுக்குள்ளது தாய்க்கிராதா? யூதாஸ் ஸ்காரியோத்தன்னைக்காட்டிக் கொடுக்க இசைந்திருந்த பெருங்குணம் அவனையீன்றவளாகிய எமதன்னைக்கில்லாதொழிதல், எங்ஙனம்? ஆனதுபற்றியே, சண்டாளர்கள் எமதன்னையின் திருச்சிரசைத் தீண்டவும், திருமுடியைத் திருடவும் இசைந்தாளன்றிவேறில்லை யென்பதே எமது துணிபு.

ஹா, அம்ம! நினதுகருணையை எவ்வாறுரைப்பது? உரைக்கவும், நினைக்கவும் முடியாத கருணாகரச் சமுத்திரமே! நின்து தாசர்களாகிய எங்களுக்குத் துன்பிழைத்ததாகிய அலகை இன்றும் என்றும் நினது திருவடித்தாமரைக் கீழ் ஒய்வொழிவின்றி நசுங்கி அல்லற்பட்டுக்கொண்டிருக்க நினது திருமுடி கவர்ந்து செல்லத்துணிந்த அலகையினுங்கொடிய அவ்வலகையை அக்கணமே நீருக்க நினையாது அதன் கொடிய எண்ணம் நிறைவேறச் சிரந்தாழ்த்தியதோர் புதுமையன்றோ?

அமலோற்பவி! மன்னுயிர்காக்கத் தன்னுயிர் துறத்தல் என்ற மஹா வாக்யத்தின் பெருமையை நின்னிடத்தே கண்டேம். நிகரற்ற நினது கருணை நீடு வாழ்க.

எவ்வித பிரயத்தனங்களும் பலிக்கவில்லை. அழுமொலி தவிர விமோசனத்திற்கிடமில்லை. தாயும், மகனும் காணப்படும் முடியிழந்த தோற்றமானது கன்னெஞ்சரையும் விடாது கதற வைத்துவிட்டது. எல்லாரும் அழுதுகொண்டிருக்கும்போது எவர் அமர்த்துவார் அழுகையை? பரமதேவதாயைத்தவிர யாருமில்லை.

அலளே, அத்தேவதாயே, அம்மா தர்க்கரசியே மக்களின் அழுகையையமர்த்தினள். அற்புதம், அற்புதம், சில விஞடிகளுக்குள் எங்கும் நிர் சப்தமாகிவிட்டது. எல்லா ரும் முழந்தாளிட்டனர். தேவதாய்க்கும், அவளது திரு க்குமாரனுக்கும் நேர்ந்துபோன நிந்தைக்குப்பரிகார மாக ஐம்பத்துமூன்றுமணிச் செபமும், மிகவும் இரக்க முள்ள தாயே என்ற ஜெபமும் ஜெபிக்கப்பட்டது.

ஊருங்காலும் ஒடுங்கியநேரம், மானிட வியாபக மொதுங்கியவேளை; வியாகூலமானது இருதயத்தை ஊ டறுத்துககொண்டிருக்கும் சமயம்; கண்ணீர் ப்ரவாகம் சுனையினின்று மெழுந்தாற்போல் பொங்கித்தாரை தா ரையாய் வடிந்துகொண்டிருக்கின்ற சந்தர்ப்பம், இத் தருணத்தில் ஜெபிக்கப்படும் ஜெபமானது எத்தகைய உருக்கமும் பக்தியுமுடைத்தானதா யிருக்குமென்பதை யெடுத்துரைத்தல் இயலாத விஷயம்.

ஹா! பெருமூச்சும், விம்மிதமும், அழுகையுங்கலந்த மந்திர ஒலியானது திவ்ய தாயின் திருச்செவிகள் வழி யூடுருவி அவளது திருஹிருதயத்தை வதைத்ததாகிய வாதனையை எமது தாய் சகிக்கமுடியாதவளாய், அவள் புரிந்தருளிய அற்புத நலத்தை எந்த நாவைக்கொண்டு புகல்வது?

ஐம்பத்துமூன்று மணிச்செபமும், "மிகவும் இரக்க முள்ள தாயே" என்ற ஜெபமும் ஜெபிக்கப்பட்டு முடிந்தன. அப்பால், அர்ச்சேயசிஷ்டகன்னிமரியாயிதஸ் நேவிஸ்மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

என்ற இறுதி ஜெபத்தை மும்முறையுச்சரித்து முடி
யுந்தருணம், ஹா! என்ன அற்புதம்! மேககர்ச்சனையை
நேர ஓர் பேரொலி ஆலயமெல்லாம் அதிரும்படி கேட்
கப்பட்டது. இவ்வளவே;

எவ்வோரும் வெளி வந்தனர். "அகப்பட்டன,
அகப்பட்டன" என்ற பேரிரைச்சல் அண்டமதிர்ந்
தன. "அற்புதம்! அற்புதம்!" என்ற ஓசையானது
நாலு திக்குகளிலிருந்தும் சப்திக்கின்றது. திருமுடி
களைக் கண்குளிரக்கண்டு தெரிசிக்கவேண்டுமென்ற
அவாவினால் இழுக்கப்பட்டு ஜனங்களனைவரும் ஒருவர்
மேலொருவர் மோதிக்கொண்டு கூட்டத்தினிடைப்
புகுவாராயினர். இஃது பெருந்துயரத்தைத் தருவதா
யிருந்தது. உடனே, எவ்விடத்திலிருந்தபோதிலும்
ஏககாலத்தில் எல்லாருங் கண்குளிரக்கண்டு தெரிசிக்
கும்படி உயர்ந்த ஓரிடத்தில் எமது தாயினதும் அவளது
திருக்குமாரனதும் திருமுடிகள் ஸ்தாபிக்கப்பட்டன.
ஹா! பயங்கரம்! அழகிய முடிகள் நசுங்கப்பட்டு அழ
கிழந்திருந்தன. சில தாரகைகளும், அத்தாரகைகளை
யேந்தி நிற்கும் வில் வளைவுகளில் சிலவற்றையும் கா
ணமுடியவில்லை. எனினும், எல்லாரும் இனிது தெரி
சித்துத் தாயினது அதியற்புத விசேஷத்தைக் கண்
ணாரக்கண்டு, வாயாரப்புகழ்ந்து அவரவர் இல்லம்புகு
வாராயினர்.

மேற்கூறிய திருமுடிகள் இரண்டும் தேவாலயத்
துக்கெதிராகக் கடற்கரையருகில் செப்பனிட்டுவைக்கப்

ட்டிருந்த இரப்புப் படகுகள் ஒன்றினுக்கடியில் கண்டெடுக்கப்பட்டன. சதியர்யாரோ தென்படவில்லை தேவதாயும் க்ஷமித்துவிட்டனள்; அவளது அன்பும், அருளும் என்றும் நிலவுமாக. அவளது பண்பும் பாது காவலும் விசேஷமாய்ப் பாததலத்தவர் மத்தியில் பிரகாசிக்குமாக. இஃதிங்ஙனமாகத்,

தீயர்களால் தீண்டப்பபட்ட அத்திருமுடிகளை நன்கு செப்பனிட்டுக் கிரீடதாரணஞ்செய்யத் தினங்குறிப்பிடப்பட்டது. 1920௵ செப்டம்பர் மாதம் 9 தேதி வியாழக்கிழமை முதல் 12-உ ஞாயிற்றுக்கிழமை வரை கிரீடதாரண உத்ஸவம் வெகு சிறப்பாகவும், வெகு கெம்பீரமாகவும் நடைபெற்றது. எமது நகர்ப் பங்கு விசாரணை, மிகவும் சங்கைக்குரிய A. மோனிஸ் சுவாமியவர்கள் மிகுந்த சிரத்தையெடுத்து இவ்வுத்ஸவத்தை மிகு விமரிசையாகக் கொண்டாடினர். திருவிழாவின் கடைசிதினத்திற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமையன்று காலை முதல் மாலை வரை நிந்தைப்பரிகார ஆராதனை செய்யும் பொருட்டாய் திவ்ய சற்பிரசாத எழுந்தேற்ற ஸ்தாபகம் செய்து வைக்கப்பட்டிருந்தது. கடைசித் தினமாகிய ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசை தேவாராதனை முதலிய சடங்குகள் நிறைவேறிய பின் மிகவும் சங்கைக்குரிய A. மோனிஸ் சுவாமியவர்கள் பிரசங்கத்தொட்டியிலேறி சுமார் ஒரு மணி நேரம் வரை, கேட்போர் மனது பரவசமாகும் வண்ணம் திவ்ய தாயினது பிரபாவங்களை வாசாமகோசரமாய்ப், பாலுங்

தேனும், பாகும் பழமும் கலந்து ஊட்டியதுபோல் பிர சங்கமாரி பொழிந்தனர்.

அப்பால், கனம் சுவாமியவர்களால் பரலோக பூலோகராஜேஸ்வரியும், பாவிகளுக்கடைக்கலமும், எழு கடல் துறைக்கும் நாமுண்டென்று பிசகாத அரணா யிருப்பவளும், பரதவர் பாதுகாவலும், மாதாவுமாகிய தீவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளுக்கும் அவ ளது திருக்குமாரனுக்கும் கிரீடதாரணம் செய்யப்பட் டது. சந்தோஷ ஆரவார கீதங்கள் கோஷித்தன. பரம தேவதாயை யாவரும் தெரிசித்து, அவளது திருப் பாத முத்திசெய்து, இஷ்டசித்திகளைப் பெற்றுச் செல்லு மாறு திவ்ய சொரூபத்தைப் பீடத்தின் மத்தியில் ஸ்தா பகம் செய்து வைக்கப்பட்டது.

அவ்வாறே, காலை முதல் மாலை வரை பரத குலத் தினர் யாவரும், ஏனைய கிறீஸ்தவர்களும் இடைவிடாது தெரிசித்துப் பாதமுத்திசெய்து செல்வாராயினர். இர வில்பஜனைக்கோஷ்டியார் மேளதாளங்களுடனும் தேவ தாயின் சித்திரப்படத்துடனும் தேவதாயின் பிரபாவங் களையும் பிரஸ்தாபசம்பவங்களையுங் குறிப்பிடக்கூடிய பாட்டுக்களைப்பாடி ஊர்வலம் வந்தனர்.

கிரீடதாரண வைபவம் முற்றுப்பெற்றது.

மங்களமுண்டாகுக.

## திவ்ய சந்தமரிய
## தவ்ஸ்நேவிஸ் ஆண்டவளது
### கிரீடதாரணத்தின் போது
### பாடிய

### பதினைந்து சீரிரட்டை
### ஆசிரிய விருத்தம்

---

வானாடு செல்வமே, வரையாடு தீபமே
வான்மக ராஜேஸ்வரியே.
வற்றாத கேணியே, பரலோக ஏணியே
வாடாத நறிய பூவே.
மறையவர் இன்பம் நீ மறைக்கொரு பிம்பம் நீ
மாசிலா வடிவம் நீயே.
மன்னவர் மகுடம் நீ மகிதல சிகரம் நீ
மகத்துவ சொரூபம் நீயே.

தேனாடு மலரடி திருமந்த்ர நகரினைத்
திருக்கோவில் கொண்ட நாளாய்
செய்தமா நன்மையை எழுதவோ நினைக்கவோ
செப்பவோ முடியாதம்மா
செய்ந்நன்றி கொன்றவர் சிறுதொழில் வஞ்சகர்
தீயவர் நினக்கிழைத்த

செயலரும் நிந்தனை நினைக்கவுந் துடிக்குமே
திருவுளம் சகித்த தென்னே.

மாணுடு நின்விழா நிறைவுற்ற தினமாறு
மதிக்குமா வணி நாள் பத்து
வளரிருட் போதுநிற் பதமுறை யிலங்கையின்
வலைப்படு கயவ ரந்தோ.
வல்லபீ நினதுடுச் சிரமிசை துலங்குமா
மணிமுடி கவர்ந்து செல்ல
மைந்தரும் மாதரும் மனமொடிந் திருகணீர்
வடித்தவர் தொழுதல் கண்டு.

மீணுடு நின்முடி அலையோரங் காணவே
மிகு புதுமை செய்த தாயே
மிளிர்வடி விழந்ததை யியல்வரை திருத்தியுன்
வியன்சிர ஸமைக்க வேண்டி
விதித்தமா மகுடமிது விருப்பமுட னேற்றருள்
விரிமழை பொழிவா யம்மா
மிகுமந்த்ர நகர்தந்த திருமந்த்ர முறைசந்த
மரிய தஸ்ரேவி ஸன்னயே.

# திவ்ய பனிமயத்தாயின் திருமுடிப் பாட்டுக்கள்.

(இரவில் பஜனைக்காரர்கள் பாடியது)

இராகம் உசேனி] [தாளம் ஆதி

---

(1) எண்ண முடியா வரத்தி எந்தாயே-திருச்
சென்னியொளிர் க்ரீடமெங்கே எந்தாயே

(2) கன்னல்மொழி மாதரசே எந்தாயே-முடி
கன்னமிட்ட பாவியாரோ எந்தாயே

(3) காந்துசுடர் வேய்ந்திருக்க எந்தாயே-வந்த
கள்வனுயிர் மீண்டதென்ன எந்தாயே

(4) கதிர்மதிமீன் காவலுக்குள் எந்தாயே-சதி
காரர் வந்த மாயமென்ன எந்தாயே

(5) ஏழைதனை எய்த்த விடம் எந்தாயே-இந்தப்
பாவிதனை யெய்த்ததுவோ எந்தாயே

(6) செருப்பிற்புழு பற்றிடுமோ எந்தாயே-செல்
இருப்புத்தூணை அரித்திடுமோ எந்தாயே

(7) என்னதுணி வென்ன செயல் எந்தாயே-அம்மா
இத்தனைக்கும் ஏன் பொறுத்தாய் எந்தாயே

(8) இரக்கமுன தியற்கையென்றோ எந்தாயே-தங்க
எண்ணிச்சும்மா இருந்தனையோ எந்தாயே

IV

(9) பாவிகட்குத் தஞ்சமென்றே எந்தாயே-அதை
நீ நினைத்துச் சகித்தனையோ எந்தாயே

(10) கள்ளர் கா முன்சிரசில் எந்தாயே-பட
உள்ளமிலைசந்திருந்ததென்ன எந்தாயே

(11) காணரிய நிந்தையிது எந்தாயே-சகித்
தாய்பெரிய விந்தையிது எந்தாயே

(12) ஏழைகள் மீதிரக்கமருள் எந்தாயே-பிழை
யெல்லாம் பொறுத்தாதரிப்பாய் எந்தாயே

---

இராகம் சிந்து பைரவி] [தாளம் ஏகம்

ஜீவாதாரம் நீயே
தேவநாயகியே
சேயர்தாயகியே
திவ்யமாமரியே

பாம்பினை மிதித்தாய் பரமனையளித்தாய்
பாவிகட்கனுகூலி ஜெயசீலி அருள்நூலி பரிபாலி
சுடர்-தாவு செங்கதிர் போர்த்தாய்
ஒளி-மேவுதாரகை சேர்த்தாய்-வளர்
தேனின் சுவை
யாருந்திருப்
பாதந்தனிலே சிந்தை படிந்தோம்
திருச்சேவைபுரிய நினைந்தோம்-அன்பு தந்தருள்
ஜீவாதாரம் நீயே

இரக்கத்தின்கேணி இகபரராணி [ராசி
எழிலார் சுயம் ப்ரகாசி தவநேசி விசுவாசி ஜெக
பாத-மிருக்கும் துஷ்டப்பசாசின்
மோச-வலையுட்பட்ட மாதோஷி-அந்தோ
யாருந்தெரி
யாதுன் சிர
மாருங்க்ரீட-பாரங் கவர்ந்தார்-இது
ஏழைச்செயலென மறந்தாய்
அன்புதந்தருள்—ஜீவாதாரம். (2)

பாதவர் மாதா வெனத்தெரியாதா
பாவமென்றறியாது நினையாது பெருந்தீது
துணிவேது
அந்த-காரவேளையிற் சென்று
சதி-காரயோசனைகொண்டு-எழில்
தங்குமுன
தங்க மதி
லங்கு பதி
வந்துநுழைந்தார்-பெரும்
நிந்தைபுரிந்து மறைந்தார்
அன்புதந்தருள்-ஜீவாதாரம் (3)

---

இராகம்-பார்ஸிநோட் தாளம்-ரகம்
தாயே தயாபரியே
தஞ்சமே, தஞ்சமே-வனர்

தாயாக வந்தெமை யாதரியே
தயை மழை பொழிய இது தருணம் மாமரியே

(2)

மந்த்ரமா நகரந்தனில்
வந்தமா, சுந்தரி-பரதவர்
மாதா வென்ற பயம் தந்தவள் நீ
திருப்பதமுன் கழல் நிதம் தந்தருள் நீ

(3)

விண்ணுர் தாரகையே
வேதியர் வேலியே-துணை
வேறிலையம்மா உன்னருகையே
இனி விடுவதுமிலையுனை வாணகையே

(4)

செய்யாத நிந்தையே
வெய்யவர் செய்தனர்-இது
சிறியவர் தொழிலெனவே சகித்தாய்
திருவருளுறை அன்னையெனப் பேர்வகித்தாய்

(5)

மாசிலாக்கன்னியுன்
சென்னியே மின்னுமோர்-மணி
மகுடமது கவர்ந்தார் நீயறிவாய்
அதை மன்னித்ததுன் செயல் யாரறிவார்

இராகம்-இ. பியாகு தாளம்-சாப்பு

தயா நிதியே தயாபரியே
சர்வஜீவ மனோகரியே
வ்யாபக ஸ்ரீ மாமரியே
வினை தீர்த்தெமை யாதரியே

(2)

காடிவரு வார்தமக்கு
நலங்கிளர் நற் புனல்சுரக்கும்
தேடரிய நிதியெமக்கு
தீங்ககலத் தடையெதற்கு

(3)

மரியெனவே யழைப்பவர்க்கு
மதுர சுவைய மூதளிக்கும்
அரிய குண அன்னையுனக்கு
அடியரெனி லதுமணக்கும்

(4)

பௌரவசீர் குலமாமெங்கள்
பரம்பரைக்கே யுரிய திங்கள்
கௌரவசீ ரடியிற்றங்க
கதித்த தவந் தவமாமெங்க

(5)

பைபரவப் படுவலையுட்
பட்டாருன்றன் திருத்தலையின்
துய்யமுடியைக் கரவில்
கவர்ந்தனரே காரிரவில்

(6)

அண்டினோரை ஆதரிப்பாய்
அவர் பிழைகளே பொறுப்பாய்
என்றதினாலேற்றாய் நிந்தை
என்னவித விநோதவிந்தை

(7)

பாவுசுவைப் புனல் வரையே
பக்தி ரஸ மெழுதுறையே
மரக்கலமே பவக்கறையை
மாற்றியே சேர் அக்கரையே.

---

இராகம்-செஞ்சுருட்டி (லாவணி) தாளம்-ஆதி

அகிலமனைத்து மொரு
மொழியிலமைத்ததிரு
அமலன்திருக்கரத்திலிருக்க
இளம்பிறையுடு சுடர்கதிலெரிக்க
மணி-மகுடமதனையபகரிக்க
வந்த-அதிசயமிதைவிரித்துரைக்க
முடி—யாதுநிச்சய
மாகு மற்பவி
வேகி யெப்படி
யோத முற்படல்
ஐயோ-கொடியர் நெஞ்சமுருக்கு
இந்த-அவமதிக்கெவர்மனச்செருக்கு

(2)

திருட்டுத்தொழில்நடத்தப்
பொருத்த முறு சனத்த
இருட்டுப்பொழுதிலேயோ பாவீயே
திரி-புவனமாள் திவ்ய பிரதாபியே
வளர்-திருப்பதிமிசை வந்துலாவியே
அவள்-இருக்கும் இருப்பிடத்தைத்தாவியே.
துணி-வேதுபெற்றதோர்
தாயிலுத்தம
தாய் சிரத்தினி
லே ஜொலித்திடு
மகுடமெடுத்த பச்சை நாவியே
உன்னை-மன்னித்தாள் எங்கள் மஹாதேவியே

(3)

தட்டுமணிக்கயிற்றை
வெட்டித்தட்டினுட்
புறத்திற் கட்டியது தொங்கவிட்ட சூது
மெல்லப்-பற்றிப்பற்றிக்கீழிறங்கலது
கடை-கெட்ட துட்டச்செய்கையன்றோ ஈது
மதி-தட்டுக்கெட்டுப்போனவகையாது
மட-மாதருக்குள
தீத பொற்புயர்
தாய் மலர்ப்பத
சேவை நிற்பவ
ரோ அவர்க்கு நிறைபாது
தந்-தாதிரிப்பாள் குறையாது

(4)

இரக்கமெனும் புனலைச்
சுரக்குந்தடாகமவள்
எவர்க்கும் நல்லுபகாரி யல்லவா
இதை-ஏனோ மறந்தாய் மஹா வல்லவா
அன-லெரிவாய் நரகக்குழி செல்லவா
இடர்-எண்ணினாய் உனக்கிது நல்லவா
அவ-ளற்புதச்சொரு
பத்தினைத்தெரி
சித்தவர்க்கதி [லவா
சித்திவிர்த்திகளெய்துமெனல் பழமை யல்
இதை-எடுத்து விரித்துனக்குச் சொல்லவா

(5)

பால்சுரக்கும் பான்மடு வைத்
தானறுத்துப் பால்குடிக்க
வே நினைத்த பான்மையது நேர
சதி-காரரிருள் சூழு மந்தகார
வேளை-யாருமறியாது வந்தபார
உப-காரி யெமதன்னை சிரோபார
முடி-பற்றியோடிய
பெற்றிதானென
உற்றதோர் மனம்
பற்றுதே நனி
பசிப்பிணி வறுமை நோய் தீரத்
தரு-வழியவளிணையடிசார

(6)

அண்டினவர்க்கபய
மென்றும் அளிப்பாளென
அன்று பெர்நர் துரைத்த வாக்கு
அது-குன்றுமெனும் பயமோதாய்க்கு
மிக-நன்று நன்றனது செல்வாக்கு
ஆஹா-கண்டோமுனதுமனப்போக்கு
பர-மண்டலத்தினி
லண்டரெத்தனே
தொண்டிசைத்தடி
தெண்டனிட்டிடும்
அரசி நினது கிர்பாநோக்கு—என்றும்
அகலாதிருக்குமடியோர்க்கு

(7)

ஆழக்கடல் குளித்து
மாமுத்ததிபடுத்துச்
சீர்மிக்குலவு மதிகுலமே
உயர்-திருமந்திரமாநகர்த்தலமே
வளர்-சிம்மாசனத்தெழுந்த நலமே
பர-தவர் தமக்குயரடைக்கலமே
வினை-நீங்க வற்புத
மோங்கு பொற்கர
மேர்ந்ததற்பர
னேர்நது பெட்புற
வேண்டுவாய் அமிர்த பொற்கலமே
எம்-விண்ணப்பமிது நற்கோகிலமே.

இராகம்—இ. தோடி தாளம்—ஏகம்

ஆரமுது நீ யெமது ஆவியுடலம்மா-மதி
சேரதீத பாத நிழல் சேரவருளம்மா

(2)

ஆழிக் கரையோரமதில் ஆரமுடிகண்டோம்-மன
நீளுகலி தீரவடங்காத களிகண்டோம்

(3)

ஆரறிவர் உன் மகிமையம்மா மரியம்மா-கழல்
சாருமெவரேனு முபகாரமருளம்மா

(4)

தூயர் கரந்தீண்டு முடி திருவடைந்த நாளே-மரி
யாய் தனக்கு மாமகுடஞ் சூடுமிந்தநாளே

(5)

இகபரமும் அடிபணியும் எங்கள் மகராசி-எமக்
கிதைவிடவோர் தினமுளவோ அழகு பிரகாசி

(6)

மந்த்ர நகர் வந்த தசுநேவிஸ் மரியம்மா-வரு
மைந்த ரெமையாள மன முவந்தருள் பொன்னம்மா

(7) [எமை

இழைத்த பிழை பொறுத்தருள்தல் நினதுகடனம்மா-
யழைத்துதயைபொழிதலுனைப் பொறுத்த கடனம்மா

# திருப்புகழ்

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி

சீத சந்திர பாத சரோருக
மேய நந்தச காய மதாருக
தேவி மங்கள ரூபி நமோ நம-திரிலோக

தேவை யிங்கொரு மானி டரூபம
தாக நன்கருள் தூய தயாநிதி
சீரி லங்குரு மாரி நமோ நம-தவவேலி

ஆத வன்றிரு மேனி யுலாவிடு
மாநவம்பெற்று வேத புராதனி
ஆர் சுயம்பிர காசி நமோ நம-விரிவான

ஆழி வெங்கட லூடு நிராதர
வாமருங்கல மீள்க நலாதர [து
வாக நின்றருள் ஜோதி நமோ நம-புவிமீ

பாத கந்தனை யேவு பிசாசுர
மேக வன்றலை தூளு றவேமிதி [தான
பாவை யம்புவி ராணி நமோ நம-இனி

பாகு செங்கனி தேனுயர் பாலொடு
யாவும் வென்றவ தீத சுபோதினி
பாவி என்பவர் நேசி நமோ நம-வரமேவு

மாது சுந்தர வாணி வரோதய
கேணி வஞ்சக ராணி தயாபர
வாரி யந்தர வேணி நமோ நம-வள நீடு

வாகு மந்திர மாநகர் மீதெழு
மார ணங்கெம தாருயிர் சீதள
மாரி எங்களை யாள்க நமோ நம-பெரியாயே